I.D. 5/2022
03-01-2024

W.W.1 அன்புமணி
குறுக்கு விசாரணை : இரண்டாவது எதிர்மனுதாரர் தரப்பு

நீங்கள் யாரிடம் வேலை பார்த்தீர்கள் என்றால் ஆவின் நிறுவனத்தில் வேலை பார்த்தேன். உங்களுக்கு சம்பளம் யார்மூலமாக கொடுக்கப்பட்டது என்றால் Texco-மூலமாக கொடுக்கப்பட்டது. உங்களுக்கு ஆவின் நிறுவனத்தில் வேலை கொடுத்ததும் Texco (Tamil Nadu Ex-serviceman corporation Limited) நிறுவனம் தானா என்றால் ஆமாம். ஆவின் நிறுவனத்திற்கு முன்னர் BSNL-ல் வேலை கொடுத்ததும் Texco நிறுவனம் தான் என்றால் சரி. BSNL-க்கு பின்னர் ஆவின் பெரம்பலூர் கிளையில் கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள். உங்களுக்கு பெரம்பலூர் நகராட்சி மைதானத்தில் புத்தககண்காட்சியின் போது மிகைநேர பணி பார்த்ததற்கு சம்பள்ம வழங்கியது Texco நிறுவனமா அல்லது ஆவின் நிறுவனமா என்றால் ஆவின் நிறுவனம். 02.02.2020-ம் தேதி அன்று உங்களுடன் வேலை பார்த்தவர் எல். கருப்பன் என்பவரை தாக்கியதாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது உண்மையா என்றால் இல்லை. 31.03.2002-ம் தேதி அன்று உங்களுக்கு பணி நியமன ஆணை கொடுத்தது Texco நிறுவனம் தான் என்றால் சரி. 19.03.2020-ம் தேதி இரண்டாவது எதிர்மனுதாரர் கழகம் ஒரு கடிதம் எழுதி அதில் உங்களை Texco நிறுவனத்தை அணுகுமாறு தெரிவித்துள்ளனர் என்றால் இல்லை. உங்களுக்கு உரிய PF, ESI ஆகியவை Texco நிறுவனத்தில் இருந்து தான் பெற்றுள்ளீர்கள் என்றால் ஆமாம். நீங்கள் BSNL வேலை பார்க்கும் போதும் ஆவினில் வேலை பார்க்கும் தான் Texco நிறுவனம் தான் சம்பளம் கொடுத்தது என்றால் சரி. ஆவின் நிர்வாகத்தில் இருந்தும் உங்களுக்கு நேரடியாக எந்த பணப்பரிவர்த்தனையும் கிடையாது என்றால் சரி. நீங்கள் Texco நிறுவத்தில் வேலை பார்த்தீர்கள் ஆவின் நிறுவனத்தில் வேலை பார்க்கவில்லை என்று

சொன்னால் சரியா என்றால் சரி. உங்களின் பணசம்பந்தமான எல்லா கோரிக்கைகளும் Texco நிறுவனத்திடம் தான் கேட்க வேண்டும் என்றால் சரி. Texco நிறுவனம் உங்களை வேலை நீக்கம் செய்ததாக எழுத்து மூலமான உத்தரவு எதுவும் கொடுத்தார்களா என்றால் இல்லை. உங்களை காத்திருப்போர் பட்டியலில் வைத்திருந்து வேறு வேலைக்கு மனு செய்திருக்கிறீர்களா என்றால் இல்லை, ஆனால் சமரசம் அதிகாரி முன்பு Texco நிறுவனத்தின் அதிகாரி அரியலூர் சிமெண்ட் பேக்டரியில் பணி உள்ளதாக கொடுப்பதாக சொன்னார்கள் ஆனால் இன்றைய தேதி வரை கொடுக்கவில்லை. உங்களது பிரமாண வாக்குமூலத்தில் பக்கம் 3–ல் பத்தி எண் 2–ல் சொல்லியுள்ளபடி உங்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் கூறப்பட்டது கணிணியில் தட்டச்சரால் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பித்து அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டது.

தலைமை தாங்கும் அதிகாரி,
தொழிலாளர் நீதிமன்றம்,
திருச்சி

Copy View